பொருளடக்கம்

குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

1 துல் ஹஜ்ஜு என்றால்? 21

2 துல் ஹஜ்ஜுக்கு எவ்வளவோ சிறப்புகள்! 22

1. அல்லாஹ் புனிதப்படுத்திய மாதம் 22

2. ஹஜ்ஜின் மாதம் 22

3. துல் ஹஜ்ஜு 11,12,13 ஆகியன அய்யாமுத் தஷ்ரீக் 23

3 துல் ஹஜ்ஜு முதல் பத்தின் சிறப்புகள் 24

1. இரண்டு வகையான அறப்போராளிகள் 27

4 எத்தனை எத்தனை நல்ல அமல்கள்! 31

5 குர்பானி சட்டங்கள் சில 37

முஹர்ரம் ஆஷூறா சிறப்புகள்

1 இஸ்லாமிய ஹிஜ்ரீ ஆண்டும்
அதன் முதல் மாதமும் 45

- ஹிஜ்ரீயில் தொடங்கும் நமது வரலாறு 46

2 முஹர்ரம் – ஓர் ஆண்டின்
முதல் மாதம் மட்டுமல்ல 47

1. பன்னிரண்டு மாதங்கள்கூடிய ஓர் ஆண்டு – இஸ்லாமின்
அருட்கொடை 47

2. புனித மாதங்களின் பின்னணி 48

3. புனிதத்தை மதிப்பது எப்படி? 50

4. மாதங்களைவிட இஸ்லாம் புனிதமானது 51

3 புத்தாண்டுக்கு என்ன செய்யலாம்? 52

4 முஹர்ரம் – அல்லாஹ்வின் மாதம் 54

1. முஹர்ரமில் இரண்டு வகை நோன்புகள் 54

2. பத்தாம் நாள் நோன்பின் சிறப்பு 55

3. பாவங்கள் மன்னிக்கப்பட நோன்பு போதுமா? 56

5 ஆஷூரா வரலாறும் படிப்பினைகளும் 58
6 ஆஷூரா நோன்பு – எப்படி? ஏன்? 64
7 முஹர்ரம் – கொடிய பாவங்களின்
விழாக் காலம் அல்ல! 69
1. ஷீஆக்கள் போட்ட விதைகள் 69
2. ஷீஆக்களும் முஹர்ரமும் 71
3. துக்கமும் ஒப்பாரியும் 75
4. பஞ்சா வணக்கம், தீ மிதி, நேர்ச்சை 76
5. காஃபிர்களின் கலாசாரம் 79
6. பித்அத்கள் - ஓர் எச்சரிக்கை 81

2

துல் ஹஜ்ஜுக்கு எவ்வளவோ சிறப்புகள்!

✿

1. அல்லாஹ் புனிதப்படுத்திய மாதம்

துல் கஅதா, துல் ஹஜ்ஜு, முஹர்ரம், ரஜப். இந்த நான்கு மாதங்களும் வானங்கள், பூமி படைக்கப்பட்ட காலத்தி லிருந்தே அல்லாஹ்விடம் புனிதமானவை என்கிறான் அல்லாஹ்.

إِنَّ عِدَّةَ الشُّهُورِ عِنْدَ اللَّهِ اثْنَا عَشَرَ شَهْرًا فِي كِتَابِ اللَّهِ يَوْمَ خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ مِنْهَا أَرْبَعَةٌ حُرُمٌ ذَلِكَ الدِّينُ الْقَيِّمُ

நிச்சயமாக அல்லாஹ்விடம் மாதங்களின் எண்ணிக்கை பன்னி ரண்டுதான். (இவ்வாறே) வானங்கள், பூமியை படைத்த நாளி லிருந்து அல்லாஹ்வின் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் நான்கு புனிதமானவை. இதுதான் நேரான மார்க்கம். (குர்ஆன் 9:36)

அந்த நான்கு மாதங்களில் போர் கூடாது. அமைதி, பாதுகாப்புக்கு உத்திரவாதம்.

2. ஹஜ்ஜின் மாதம்

ஹாஜிகள் சிரமங்களைத் தாங்கியபடி தொலை தூரப் பயணம் செய்து மக்காவில் உள்ள அல்லாஹ்வின் புனிதப்பள்ளி கஅபாவை ஹஜ்ஜு செய்வார்கள். பாவங்கள் மன்னிக்கப்பட்டு பிறந்த குழந்தைபோல் சுத்தமாக திரும்புவார்கள். போர் தடுக்கப்பட்ட மாதமாய் இது இருப்பதற்கு இதுவும் காரணம். இந்த உயர்ந்த வணக்கத்திற்குப் புறப்படுகிறவர்கள் அச்சமில்லாது போய் வர வேண்டும் அல்லவா?

3. துல் ஹஜ்ஜு 11,12,13 ஆகியன அய்யாமுத் தஷ்ரீக்

عَنْ جُبَيْرِ بْنِ مُطْعِمٍ عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَذَكَرَ مِثْلَهُ وَقَالَ كُلُّ أَيَّامِ التَّشْرِيقِ ذَبْحٌ

அதாவது, பத்தாவது நாள் மட்டுமின்றி, இந்த நாட்களிலும் குர்பானி கொடுக்கலாம். (அறிவிப்பு: ஜுபைர் இப்னு முத்யிம் ﷺ, முஸ்னது அஹ்மது 16752, ஸஹீஹுல் ஜாமிஉ 4537)

இந்த நாட்களில் தக்பீர் முழங்குகிற நற்செயலும் இருக்கின்றது.

كَانَ عَلِيٌّ - رضي الله عنه - يُكَبِّرُ بَعْدَ صَلَاةِ الْفَجْرِ يَوْمَ عَرَفَةَ إِلَى صَلَاةِ الْعَصْرِ مِنْ آخِرِ أَيَّامِ التَّشْرِيقِ، وَيُكَبِّرُ بَعْدَ الْعَصْرِ

அலீ ﷺ அவர்கள் அரஃபா தினத்தின் ஃபஜ்ர் தொழுகையிலிருந்து அய்யாமுத் தஷ்ரீக்கின் கடைசி தினத்தின் (பிறை 13) அஸர் வரை தக்பீர் சொல்வார்கள். (முஸன்னஃப் இப்னு அபீஷைபா 5631)

3

துல் ஹஜ்ஜு முதல் பத்தின் சிறப்புகள்

✿

1. கஅபாவுக்கு ஹஜ்ஜு செய்ய வரும் ஹாஜிகளைப் பற்றி அல்லாஹ் சொல்கிறான்:

لِيَشْهَدُوا مَنَافِعَ لَهُمْ وَيَذْكُرُوا اسْمَ اللَّهِ فِي أَيَّامٍ مَعْلُومَاتٍ عَلَى مَا رَزَقَهُمْ مِنْ بَهِيمَةِ الْأَنْعَامِ فَكُلُوا مِنْهَا وَأَطْعِمُوا الْبَائِسَ الْفَقِيرَ

தங்கள் (இம்மை, மறுமை) பலன்களை நாடியும், குறிப்பிட்ட நாட்களில் அல்லாஹ் அவர்களுக்குக் கொடுத்த (ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய) கால்நடைகள்மீது அவனது பெயரைக் கூறி அறுப்பதற்காகவும் அ(ங்கு வருவார்கள். அவ்வாறு அறுக்கப் பட்ட)வற்றிலிருந்து நீங்களும் உண்ணுங்கள்; சிரமப்படும் ஏழைகளுக்கும் உண்ணக் கொடுங்கள். (குர்ஆன் 22:28)

குறிப்பிட்ட நாட்களில் அல்லாஹ்வின் பெயரை நினைவுகூர்வார்கள் என்பதற்கு துல் ஹஜ்ஜின் பத்து நாட்கள் என்று இப்னு அப்பாஸ் ﷺ விளக்கம் சொன்னார்கள். ஆம், இந்நாட்கள் முழுதும் அல்லாஹ்வைப் புகழ்ந்து தக்பீர் சொல்ல வேண்டும். அதிகம் அவனை நினைவுகூர வேண்டும். அவனுக்குப் பிடித்த நல்ல காரியங்களை நிறைய செய்ய வேண்டும்.

அதில் மிக முக்கியம், 9வது நாள் அரஃபா மைதானத்தில் திரண்டு ஹஜ்ஜை நிறைவேற்றுவது. சக்தியுள்ளவர்கள்மீது கடமை. 10வது நாள், கடைசி நாள் பெருநாள். ஹஜ்ஜு கடமை இல்லாதவர்கள் கூட, இந்நாளின் சிறப்புத் தொழுகையில் கலந்துகொள்வது கடமை. இதன் மூலம் அல்லாஹ்வை நினைவுகூர வேண்டும். சக்தி உள்ளவர்கள் குர்பானி கொடுக்க வேண்டும். அதாவது, ஓர் ஆடு அல்லது குறைந்தபட்சம் மாடு, ஒட்டகம் இவற்றில் ஒரு பங்கிலாவது சேர வேண்டும். இப்பிராணிகளை அல்லாஹ்வின் பெயர் சொல்லி அறுப்பதும் அவனை நினைவுகூர்வதில் அடங்கும்.

5

குர்பானி சட்டங்கள் சில

✿

1. குர்பானி கொடுப்பது வலியுறுத்தப்பட்ட நபிவழி. சக்தி உள்ளவர் அலட்சியப்படுத்தக் கூடாது.

2. ஓர் ஆடு, அல்லது மாடு, ஒட்டகம் தரலாம். மாடு, ஒட்டகம் இரண்டிலும் கூட்டு சேரலாம். மாட்டுக்கு ஏழு நபர்கள். ஒட்டகத்திற்கு ஏழு, பத்து நபர்கள் வரை கூட்டு சேரலாம்.

3. குர்பானி கொடுக்க நாடியவர், துல் ஹஜ்ஜு முதல் பிறை பிறந்ததிலிருந்து முடி, நகம் எதையும் வெட்டக் கூடாது. தலை முடி மட்டுமல்ல, உடம்பில் உள்ளதையும் பிடுங்கி எறியக் கூடாது.

அதேசமயம், தற்செயலாக முடிகளை இழப்பது, மருத்துவ காரணங்களுடன் நீக்குவது குற்றமில்லை. பரிகாரமும் அவசியமில்லை. உடைந்த நகத்தை அகற்றுவது, காயம் பட்ட இடத்திலிருந்து முடியை நீக்கி மருந்திடுவது இந்த நேரங்களில் அப்படிச் செய்யாவிட்டால் தீங்கு ஏற்படும் என்றால் கூடும். குளிப்பதும் கூடும். அப்போது முடி உதிர்வதால் குற்றமில்லை. நறுமணம் பூசுவதோ, தாம்பத்திய உறவோ, தைக்கப்பட்ட ஆடைகள் அணிவதோ கூடும்.

ஆரம்பத்தில் குர்பானி தரும் தீர்மானமில்லாதவர், பிறகு அந்த முடிவுக்கு வந்தால், அப்போதிருந்து அவர் முடி, நகங்களை நீக்கக் கூடாது. மற்றவர் சார்பாக குர்பானி தரும்போது, யார் அந்தப் பிராணிக்கு உரிமையாளரோ, அவருக்கே இச்சட்டம். அறுப்பவரோ, உரிமையாளரின் குடும்பத்தாரோ இதை அமல் செய்வது அவசியமில்லை. நபியவர்கள் தமது குடும்பத்தார் சார்பாக கொடுத்தபோதும், அவர்களின் குடும்பத்தார் இதை அமல் செய்ததாக ஆதாரம் இல்லை.

4. ஒரு வயது ஆடு, இரண்டு வயது மாடு, ஐந்து வயது ஒட்டகம் இவற்றை முஸின்னா எனப்படும். இந்த வயதைக் கவனத்தில்

கொண்டு தேர்வு செய்ய வேண்டும். இதில் பெட்டை, கிடாய் என்று வித்தியாசம் எதுவுமில்லை. எதையும் அறுக்கலாம்.

لَا تَذْبَحُوا إِلَّا مُسِنَّةً، إِلَّا أَنْ يَعْسُرَ عَلَيْكُمْ، فَتَذْبَحُوا جَذَعَةً مِنَ الضَّأْنِ

முஸின்னா தவிர எதையும் அறுக்காதீர்கள். அது சிரமம் என்றால், ஆறு மாதம் பூர்த்தியான செம்மறி ஆட்டை அறுங்கள் என்பது கட்டளையாகும். (அறிவிப்பு: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் ﷺ, முஸ்லிம் 1963)

5. பிராணிகள் குறை இல்லாமல், ஆரோக்கியமாக இருப்பது முக்கியம்.

أَرْبَعٌ لاَ تَجُوزُ فِي الأَضَاحِي الْعَوْرَاءُ بَيِّنٌ عَوَرُهَا وَالْمَرِيضَةُ بَيِّنٌ مَرَضُهَا وَالْعَرْجَاءُ بَيِّنٌ ظَلْعُهَا وَالْكَسِيرُ الَّتِي لاَ تَنْقَى

வெளிப்படையாக தெரியும் குருடு, வெளிப்படையாக தெரியும் நோய், வெளிப்படையாக தெரியும் நொண்டி, எலும்பில் மஜ்ஜை இல்லாத மெலிவு ஆகிய குறைபாடுகள்கொண்ட பிராணிகளை அறுக்கக் கூடாது என்பதும் நபியவர்களின் கட்டளை. (அறிவிப்பு: பர்ராஉ இப்னு ஆஸிஃப் ﷺ, அபூதாவூது 2802, இர்வாஃ 1148)

வெளிப்படையாகத் தெரியக்கூடிய என்று சொல்வதின் அர்த்தம், மறைமுகமாக சின்ன சின்ன குறைகள்கொண்ட பிராணிகளைக் கொடுப்பது குற்றமில்லை என்பதற்கே.

6. குடும்பத்திற்கு ஓர் ஆடு அல்லது மாடு, ஒட்டகத்தின் ஒரு பங்கு கூட போதும். அதாவது, குடும்பத்தில் ஒவ்வொருவர் சார்பாகவும் கொடுக்கத் தேவையில்லை.

سَأَلْتُ أَبَا أَيُّوبَ الأَنْصَارِيَّ: كَيْفَ كَانَتِ الضَّحَايَا عَلَى عَهْدِ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ؟ فَقَالَ: "كَانَ الرَّجُلُ يُضَحِّي بِالشَّاةِ عَنْهُ وَعَنْ أَهْلِ بَيْتِهِ

நபியவர்களின் காலத்தில் எப்படி குர்பானி கொடுக்கப்பட்டது என்று அபூஅய்யூப் ﷺ அவர்களிடம் கேட்டதற்கு, ஒருவர் தமக்கும் தமது குடும்பத்திற்கும் சேர்த்து ஓர் ஆட்டையே குர்பானி கொடுப்பார் என்றார்கள் அவர்கள். (சுனனுத் திர்மிதீ 1505, ஸஹீஹுல் இப்னு மாஜா 2546)

இறந்தவர்கள் சார்பாக குர்பானி கொடுப்பதற்கு ஆதாரங்கள் இல்லை. நபியவர்களோ, தோழர்களோ அப்படிக் கொடுத்ததில்லை. அவர்கள் சார்பாக தர்மங்கள் செய்யலாம். அது பலன் தரும்.

1

இஸ்லாமிய ஹிஜ்ரீ ஆண்டும் அதன் முதல் மாதமும்

✿

அமீருல் மூஃமினீன் உமர் இப்னுல் கத்தாப் ﷺ ஆட்சிக்காலத்தில் ஒரு கடன் பத்திரம் அவர்களின் பார்வைக்கு வந்தது. அதில் மாதம் ஷஅபான் என்றிருந்தது. 'எழுதியவர்கள் எந்த ஷஅபானைக் குறிப்பிடுகிறார்கள்? கடந்த வருடத்து ஷஅபானா? அடுத்த வருடமா? இப்போதைய ஷஅபானா?' முடிவுக்கு வர முடியாமல் உமர் ﷺ, நமக்கென ஆண்டுகள் ஏன் இல்லை என்ற கேள்வியுடன் யோசித்தார்கள். முஹாஜிர், அன்ஸாரி தோழர்களை அழைத்தார்கள். ஆலோசனை கேட்டார்கள். வருடத்தைக் குறிப்பிட மக்களுக்கு ஒரு தொடக்கம் தேவை. என்ன செய்யலாம்?

ரோமர்களின் ஆண்டின்படி போகலாமா? வேண்டாம். அது ரொம்ப பழையது. அவர்கள் துல்கர்னைன் காலத்திலிருந்து கணக்கிடுகிறார்கள்.

சரி, பாரசீகர்களின் ஆண்டு? வேண்டாம். அதில் நிறைய குழப்பங்கள். ஒவ்வொரு புதிய மன்னனும் புது ஆண்டை ஆரம்பிக்கிறான்.

யானை ஆண்டு? அப்ரஹாவின் யானைப் படை துவம்சம் செய்யப்பட்டதே, அதிலிருந்து? அதுவும் நிராகரிக்கப்பட்டது.

ஆலோசனையில் நான்கு கருத்துகள் முக்கியமாகப் பேசப்பட்டன.

1. நபியவர்களின் பிறப்பு
2. அவர்கள் நபியான வருடம்
3. அவர்களின் ஹிஜ்றத்
4. மரணம்

இதில் பிறந்த வருடமும், நபியான வருடமும் சர்ச்சை செய்யப்பட்டன. அதனால் கைவிடப்பட்டன. நபியவர்கள் இறந்த வருடத்தி

லிருந்து தொடங்கினால் முஸ்லிம்கள் எல்லோரையும் அது கவலை யில் தள்ளும். அதையும் கணக்கிட வேண்டாம். ஹிஜ்றத் செய்த வருடமே பொருத்தம் என்று முடிவானது. (பத்ஹுல் பாரீ பாகம் 7, பக் 268 இதே கருத்து சஹ்ல் இப்னு சஅது ﷺ மூலமும் அறிவிக்கப் படுகிறது. புகாரீ 3934)

ஹிஜ்ரீயில் தொடங்கும் நமது வரலாறு

அலீ ﷺ அவர்களிடம் உமர் ﷺ கேட்டார்கள், 'நம்முடைய வரலாறு எப்போதிருந்து ஆரம்பிக்கிறது' என்று. அலீ ﷺ சொன்னார்கள்,

مِنْ يَوْمِ هَاجَرَ رَسُولُ اللهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ وَتَرَكَ أَرْضَ الشِّرْكِ

'இணைவைப்பவர்களின் பூமியை விட்டுவிட்டு அல்லாஹ்வின் தூதர் ﷺ வெளியேறினார்களே அப்போதிருந்து. அதாவது, ஹிஜ்றத்திலிருந்து.' (அறிவிப்பு: சஈது இப்னு முசய்யப் ﷺ, முஸ்தத்ரக் அல்ஹாகிம் 4287)

உமர் ﷺ தீர்மானமாக அறிவித்தார்கள். மக்காவை விட்டு வெளி யேறி மதீனா வந்ததிலிருந்து ஆண்டைத் தொடங்கலாம். அதுதான் ஹிஜ்ரீ 1 ஆரம்பமானது. ஆனால் நபி ﷺ அவர்கள் மதீனா வந்தது ரபீஉல் அவ்வல் மாதம். அப்படியென்றால் அதுதான் முதல் மாதமா? நமது ஆண்டின் முதல் மாதம் எது?

புதிய முடிவு வெளியானது. நபியவர்கள் மதீனா வந்தது ரபீஉல் அவ்வல்தான், ஆனால் ஹிஜ்றத் செய்யும் யோசனை துல்ஹஜ் ஜில் ஆரம்பமானது. மதீனாவாசிகளின் இரண்டாம் அகபா உடன் படிக்கை அப்போதுதான் நடந்தது. அவர்கள் ஹஜ்ஜுக்கு வந்த நேரம் அது. அதற்கு அடுத்த மாதம் முஹர்ரம். மதீனாவாசிகள் தீர்மானமாக வேலையில் இறங்கிய மாதம். ஹிஜ்றத் திட்டங்கள் ஆரம்பமாயின.. எனவே, ஹிஜ்ரீ ஆண்டின் முதல் மாதம், முஹர்ரம். ஆனால் முஹர்ரம் மாதம் ஆண்டின் ஒரு தொடக்கம் மட்டுமல்ல!

2

முஹர்ரம் – ஓர் ஆண்டின் முதல் மாதம் மட்டுமல்ல

✿

إِنَّ عِدَّةَ الشُّهُورِ عِنْدَ اللَّهِ اثْنَا عَشَرَ شَهْرًا فِي كِتَابِ اللَّهِ يَوْمَ خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ مِنْهَا أَرْبَعَةٌ حُرُمٌ ذَلِكَ الدِّينُ الْقَيِّمُ فَلَا تَظْلِمُوا فِيهِنَّ أَنْفُسَكُمْ وَقَاتِلُوا الْمُشْرِكِينَ كَافَّةً كَمَا يُقَاتِلُونَكُمْ كَافَّةً وَاعْلَمُوا أَنَّ اللَّهَ مَعَ الْمُتَّقِينَ

திட்டவட்டமாக அல்லாஹ்விடம் மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டுதான். இப்படித்தான் வானங்கள், பூமியை படைத்த நாளிலிருந்து அல்லாஹ்வின் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் நான்கு புனிதமானவை. இதுதான் நிலையான மார்க்கம். ஆகவே, இவற்றில் (போர்புரிந்து) உங்களுக்கு நீங்களே தீங்கிழைத்துக் கொள்ள வேண்டாம். எனினும், இணைவைத்து வணங்குபவர்களில் எவரேனும் (அம்மாதங்களில்) உங்களுடன் போர் புரிந்தால் அவ்வாறே நீங்களும் அவர்கள் அனைவருடனும் போர் புரியுங்கள். அறிந்துகொள்ளுங்கள்: இறையச்சம் உள்ளவர்களுடன் மட்டுமே அல்லாஹ் இருக்கிறான். (குர்ஆன் 9:36)

1. பன்னிரண்டு மாதங்கள்கூடிய ஓர் ஆண்டு – இஸ்லாமின் அருட்கொடை

ஆண்டுக்கு பன்னிரண்டு மாதங்கள். திட்டவட்டமாக அறிவிக்கிறான் அல்லாஹ். பழங்காலத்தில் அறபிகள் மாதங்களை முன்னும் பின்னுமாக மாற்றிக்கொண்டு இருந்தார்கள். அதில் ஏகப்பட்ட குளறுபடிகள். அறபிகள்போல மற்ற சமுதாயங்களிடமும் சரியான கணக்கு இல்லை. ரோமர்களின் பழைய காலண்டர் ஆண்டுக்குப் பத்து மாதங்களுடன் இருந்தது.

நிலா வளருவதையும் தேய்வதையும் வைத்து மிக எளிதாக மாதங்களைக் கணக்கிட வழி செய்த அல்லாஹ், அதன் சரியான

5

ஆஷூரா வரலாறும் படிப்பினைகளும்

✿

அப்துல்லாஹ் இப்னு உமர் ﷺ சொல்கிறார்கள்:

أَنَّ أَهْلَ الْجَاهِلِيَّةِ كَانُوا يَصُومُونَ يَوْمَ عَاشُورَاءَ وَأَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم صَامَهُ وَالْمُسْلِمُونَ قَبْلَ أَنْ يُفْتَرَضَ رَمَضَانُ فَلَمَّا افْتُرِضَ رَمَضَانُ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم إِنَّ عَاشُورَاءَ يَوْمٌ مِنْ أَيَّامِ اللَّهِ فَمَنْ شَاءَ صَامَهُ وَمَنْ شَاءَ تَرَكَهُ

அறியாமைக் கால மக்கள் (குறைஷிகள்) முஹர்ரம் பத்தாவது நாள் (ஆஷூரா) அன்று நோன்பு வைப்பார்கள். அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களும் முஸ்லிம்களும் றமளான் நோன்பு கடமையாக்கப் படுவதற்கு முன்புவரை முஹர்ரம் பத்தாவது நாளில் நோன்பு வைத்தார்கள். றமளான் நோன்பு கடமையானதும் அல்லாஹ்வின் தூதர் ﷺ, 'முஹர்ரம் பத்தாவது நாள் அல்லாஹ்வின் நாட்களில் ஒரு நாள். நாடியவர் அந்நாளில் நோன்பு நோற்கலாம்; நாடியவர் அதை விட்டுவிடலாம்' என்றார்கள். (முஸ்லிம் 2072)

ஆஷூரா நோன்பு மிகப் பழமையானது. நபி ﷺ அவர்கள் பிறப்பதற்கு முன்பே அது குறைஷிகளின் வழக்கத்தில் இருந்தது. நபி இப்றாஹீம் ﷺ அவர்களின் மார்க்க வழிமுறைகளில் மிச்சம் இது. (தஃப்சீர் குர்துபீ)

وَكَانَ يَوْمًا تُسْتَرُ فِيهِ الْكَعْبَةُ

அந்த நாளில்தான் கஅபாவுக்குப் புதிய திரை போடப்படும். (ஆயிஷா ﷺ, புகாரீ 1592)

இப்னு அப்பாஸ் ﷺ சொல்கிறார்கள்:

أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَدِمَ الْمَدِينَةَ فَوَجَدَ الْيَهُودَ صِيَامًا يَوْمَ عَاشُورَاءَ فَقَالَ لَهُمْ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم مَا هَذَا الْيَوْمُ الَّذِى تَصُومُونَهُ فَقَالُوا هَذَا يَوْمٌ عَظِيمٌ

أَنْجَى اللَّهُ فِيهِ مُوسَى وَقَوْمَهُ وَغَرَّقَ فِرْعَوْنَ وَقَوْمَهُ فَصَامَهُ مُوسَى شُكْرًا فَنَحْنُ نَصُومُهُ فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم فَنَحْنُ أَحَقُّ وَأَوْلَى بِمُوسَى مِنْكُمْ فَصَامَهُ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم وَأَمَرَ بِصِيَامِهِ

அல்லாஹ்வின் தூதர் ﷺ மதீனா வந்தபோது, யூதர்கள் முஹர்ரம் பத்தாவது நாளில் (ஆஷூரா) நோன்பு வைத்திருப்பதைக் கண்டார்கள். 'நீங்கள் நோன்பு நோற்றிருக்கும் இது என்ன நாள்?' என்று கேட்டார்கள். அதற்கு யூதர்கள், 'இது ஒரு மகத்தான நாள்; இந்த நாளில்தான் மூஸாவையும் அவருடைய சமுதாயத்தையும் அல்லாஹ் காப்பாற்றி, ஃபிர்அவ்னையும் அவனுடைய சமுதாயத்தையும் மூழ்கடித்தான். எனவே, மூஸா ﷺ அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக நோன்பு நோற்றார்கள். ஆகவே, நாங்களும் இந்நாளில் நோன்பு நோற்கிறோம்' என்றார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் ﷺ, 'உங்களைவிட நாங்களே மூஸா ﷺ அவர்களுக்கு மிகவும் உரிமையுள்ளவர்கள், நெருக்கமானவர்கள்' என்று சொன்னார்கள். பின்னர், அல்லாஹ்வின் தூதர் ﷺ தாமும் நோன்பு நோற்று, நோன்பு நோற்குமாறும் கட்டளை பிறப்பித்தார்கள். (முஸ்லிம் 2083)

ஆஷூரா தினத்தை ஒரு மகத்தான நாள் هَذَا يَوْمٌ عَظِيمٌ என்று சொன்னது மட்டுமல்ல, நல்ல நாள் என்றும் யூதர்கள் சொன்னார்கள்.

هَذَا يَوْمٌ صَالِحٌ

இது ஒரு நல்ல நாள். (அறிவிப்பு: இப்னு அப்பாஸ் ؓ, புகாரீ 2004)

هَذَا الْيَوْمُ الَّذِي أَظْهَرَ اللَّهُ فِيهِ مُوسَى وَبَنِي إِسْرَائِيلَ عَلَى فِرْعَوْنَ فَنَحْنُ نَصُومُهُ تَعْظِيمًا لَهُ

இந்த நாளில்தான் மூஸா ﷺ அவர்களுக்கும் பனூ இஸ்ராயீல் சமுதாயத்துக்கும் பிர்அவ்னுக்கெதிராக அல்லாஹ் வெற்றி கொடுத்தான். எனவே, இந்நாளைக் கண்ணியப்படுத்தி நாங்கள் நோன்பு வைக்கிறோம். (இப்னு அப்பாஸ் ؓ, முஸ்லிம் 2712)

நபி ﷺ அவர்கள் இதை மறுக்கவில்லை. மக்கா வாழ்க்கையின்போதே தாமும் முஸ்லிம்களும் நோன்பு வைப்பது வழக்கம் என்றாலும், இந்த தடவை யூதர்களின் விசயம் தெரிய வந்தவுடன், ஆஷூரா நோன்பை வலியுறுத்திக் கட்டளை இட்டார்கள்.

فَقَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم لأَصْحَابِهِ أَنْتُمْ أَحَقُّ بِمُوسَى مِنْهُمْ فَصُومُوا

7

முஹர்ரம் – கொடிய பாவங்களின் விழாக் காலம் அல்ல!

✿

முஹர்ரம் மாதத்தின் புனிதத்தை மதிப்பவர்கள், பாவங்களை விட்டு தூரமாகுவார்கள். நன்மைகளைச் செய்வார்கள். நோன்புகள் வைப்பார்கள் என்றே நபிவழி சொல்கிறது. ஆனால், நமது சமூதாயம் எல்லாப் பாவங்களுக்கும் வாசலைத் திறந்து வைத்து அதன் புனிதத்தைக் கெடுத்துக்கொண்டிருக்கிறது.

ஒன்றல்ல, இரண்டல்ல.. துல்லியமாகக் கணக்கிட்டு சொல்ல முடியாத அளவு, எத்தனையோ பாவங்களுக்கு விழாக் காலமாக முஹர்ரமை ஆக்கிவிட்டது. ஷிர்க், பித்அத்களின் கொண்டாட்டம் இந்த மாதத்தில்போல எந்த மாதத்திலும் இல்லை. உண்மை!

1. ஷீஆக்கள்[5] போட்ட விதைகள்

இது இன்று நேற்றல்ல, காலங்காலமாக இருக்கும் நிலைமை. முஹர்ரமின் பெயரால் நடக்கும் அத்தனை ஷிர்க், பித்அத்களுக்கும் மூல காரணமாக இருந்தவர்கள், இருப்பவர்கள் ஷீஆக்கள்.

---

5 ஷீஆ (ராஃபிளா): ஷீஆ என்றால் ஆதரவாளர். இவர்களை ராஃபிளா (புறக்கணித்தவர்கள்) என்றும் சொல்லப்படும். ஏனெனில், அபூ பக்ர், உமர், உஸ்மான் ﷺ ஆகிய மூவரின் கிலாஃபத்தையும் இவர்கள் புறக்கணித்து, நான்காம் கலீஃபா அலீ ﷺ அவர்களின் ஆதரவாளர்களாகத் தங்களை முன்னிறுத்திக்கொண்டு நபி ﷺ அவர்களது குடும்பத்தாரின் உரிமைகளுக்காகப் போராடுவதாய் குழப்பம் விளைவித்தபடி அரசியலில் இறங்கியவர்கள். பிறகு பல வழிகெட்ட கொள்கைகளைப் பரப்பி தனிப் பிரிவாக உருமாறினார்கள். இவர்களில் அலீ ﷺ அவர்களையே அல்லாஹ்வின் அவதாரமாக நம்பி வணங்குபவர்களும், அலீயவர்களின் சந்ததியினருக்கு இறையாற்றல் இருப்பதாக வாதிடுபவர்களும் உண்டு. நபித்தோழர்களில் ஒரு சிலரைத் தவிர